# மும்மணிகள்

307
305

கி.ஆ.பெ.விசுவநாதம்

முப்பெரும் மணிகள்

# மும்மணிகள்

முத்தமிழ்க் காவலர், கலைமாமணி
டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் டி.லிட்.,

பாரி நிலையம்
184. பிராட்வே. சென்னை. 600108

| | | | |
|---|---|---|---|
| முதற்பதிப்பு | : | மே, | 1954 |
| இரண்டாம் பதிப்பு | : | ஜனவரி, | 1955 |
| மூன்றாம் பதிப்பு | : | நவம்பர், | 1957 |
| நான்காம் பதிப்பு | : | செப்டம்பர், | 1959 |
| ஐந்தாம் பதிப்பு | : | டிசம்பர், | 1962 |
| ஆறாம் பதிப்பு | : | அக்டோபர், | 1967 |
| ஏழாம் பதிப்பு | : | நவம்பர், | 1973 |
| எட்டாம் பதிப்பு | : | டிசம்பர், | 1978 |
| ஒன்பதாம் பதிப்பு | : | மே, | 1983 |
| பத்தாம் பதிப்பு | : | மே, | 1991 |

**விலை : ரூ. 5-00**

*அச்சிட்டோர் :*
*மாருதி பிரஸ்,*
*173, பீட்டர்ஸ் சாலை,*
*சென்னை-600 014.*

# பதிப்புரை

இன்று தமிழகத்தில் புகழ் சிறந்து விளங்கும் அரசியல் தலைவர்களில் பலர், பேரறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு எழுச்சியும் உணர்ச்சியும் பெற்றவர்கள். 1921-இல் முதன்முதல் அவருடைய கன்னிப்பேச்சு எழுந்தது. அன்றுமுதல் இன்று வரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அந்த வீரமுழக்கம் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

தமிழும், தமிழரும், தமிழ்நாடும் கி. ஆ. பெ. வி. அவர்களின் உள்ளத்தைவிட்டு நீங்காதவை. ஒழுக்கத்தை உயிர் என ஓம்புவார்கள். உழைப்பும் கட்டுப்பாடும் அவர்களின் உடன்பிறப்பு. தவறு கண்டபோது தவறியவர் யாராக இருந்தாலும் அஞ்சாது கண்டிக்கும் தமிழர் வீரம் செறிந்தது அவர்களின் ஆற்றல். அவர்களின் பண்பு நிறைந்த எண்ணமெல்லாம் இதுவரை பேச்சாக மலர்ந்து மணம்வீசிக் கேட்பவருக்கு மட்டும் பயன்தந்து தென்றலோடு தென்றலாகக் கலந்து மறைந்துவந்தது. அவற்றினை நல்ல நூல்களாக்கிக் கேளாதவரும் பயன்பெறுமாறு பரவச் செய்ய நினைத்தோம்.

நண்பர் திரு. அன்புப் பழம்நீ அவர்களின் துணைகொண்டு, எங்கள் விருப்பத்தினைத் தெரிவித்தோம்; இசைந்தார்கள். இதுவரை "ஐந்து செல்வங்கள்", "தமிழ் மருந்துகள்", "அறிவுக்கு உணவு" என்ற மூன்று நூல்கள் வந்துள்ளன. இது நான்காவது. இதைத் தொடர்ந்து இன்னும் பல நூல்கள் வரவிருக்கின்றன. எங்கள் விருப்பத்திற்கிணங்கி, தமது சிறந்த நூல்களை வெளியிடத் தந்துவரும் திரு. கி. ஆ. பெ. வி. அவர்களுக்கு எங்கள் நன்றி. அவற்றினை ஏற்றுப் போற்றிவரும் தமிழ்ப் பெருமக்களுக்கு எங்கள் வணக்கம்.

சென்னை-1<br>
மே, 1954

தங்கள்அன்பிற்குரிய<br>
அ. செல்லப்பன்

# திரிகடுகம்

தமிழகத்தில் இருந்து ஒளிவீசித் தமிழ் வளர்த்து அழிந்து போன சங்கங்கள் மூன்று. அவை முறையே முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனப்பெறும்.

கடைச் சங்கத்தில் இருந்த இலக்கிய நூல்கள் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என்பன. இவை 36 நூல்கள். 10-ம், 8-ம் மேல்கணக்கு ஆகும். அவை பெரும்பாலும் காதலையும், வீரத்தையும், கொடையையும் குறிப்பன. அடுத்த 18-ம் கீழ்க்கணக்கு ஆகும். இவை யாவும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் குறித்து, மக்களிடையே ஒழுக்கத்தை நிலைநிறுத்தத் தோன்றியவை. இப் பதினெட்டு நூல்களும்,

| | | | |
|---|---|---|---|
| 1. | நாலடியார் | 10. | திணைமாலை நூற்றைம்பது |
| 2. | நான்மணிக்கடிகை | 11. | திருக்குறள் |
| 3. | இன்னா நாற்பது | 12. | திரிகடுகம் |
| 4. | இனியவை நாற்பது | 13. | ஆசாரக்கோவை |
| 5. | கார் நாற்பது | 14. | பழமொழி |
| 6. | களவழி நாற்பது | 15. | சிறுபஞ்சமூலம் |
| 7. | ஐந்திணை ஐம்பது | 16. | கைந்நிலை |
| 8. | திணைமொழி ஐம்பது | 17. | முதுமொழிக்காஞ்சி |
| 9. | ஐந்திணை எழுபது | 18. | ஏலாதி |

எனப் பெயர்பெறும்.

இவற்றுள் திரிகடுகம் 12-வது இலக்கியமாகும். இதனைச் செய்தவர் பெயர் ஆசிரியர் நல்லாதனார். இந்நூல் தோன்றி ஏறக்குறைய 1800 ஆண்டுகளாயின. திரிகடுகம் சுக்கு, திப்பிலி, மிளகு ஆகிய மூன்றும் சேர்ந்த ஒரு மருந்து. இது உடலைப் பற்றிய பிணிகளைத் தீர்க்கும் ஒரு சிறந்த மருந்து. உள்ளத்தைப் பற்றிநிற்கும் பிணிகளைத் தீர்க்கும் இந்நூலுக்கும், இம் மருந்தின் பெயர் பொருந்தி நிற்பது வியப்பிற்குரிய ஒன்றாகும்.

# மும்மணிகள்

மும்மணிகள் என்பது திரிகடுகம் என்ற நூலின் மறுபிறவி

இந்நூல் கவிதையாக இருந்தமையால், புலவர்களுக்கு மட்டுமே சுவைக்க உரிமையுடையதாக இருந்துவந்தது. அதை எளிய நடையில் எழுதிப் பொது உடைமையாக்கிப் பொது மக்கள் அனைவர்க்கும் வழங்குவதே இப் பணியின் நோக்கம்.

நேருக்கு நேராகப் பதவுரை, பொழிப்புரைகள் இன்றிக் கருத்துரையாகவே எழுதப்பெறுகிறது. பெரும்பான்மையான கருத்துக்கள் திரிகடுகத்தைத் தழுவியதாகவே இருக்கும். காலத்திற்கு ஏற்ப வேண்டாத சில விடப்பட்டு, வேண்டிய சில வருவிக்கப் பெற்றுமிருக்கும்.

பழந்தமிழ் மக்களின் அறிவை, அன்பை, அறத்தை, பண்பை, வாழ்வை நன்கறிய இந்நூல் துணைசெய்யும்.

ஒழுக்கம் என்பதே இன்னது என்று அறியாது, தவறான வழியில் நெறிதவறி நடக்கும் பெரும்பான்மையான இன்றைய தமிழ் மக்களுக்கு, இந்நூல் ஒரு நல்ல வழிகாட்டி யாக இருக்குமென்றும் நம்பலாம்.

நல்ல குறிக்கோளை முன்வைத்து வெளிவருகிற இந் நூலின் பிழைகளைப் பொருட்படுத்த வேண்டாமெனத் தமிழ் கற்று உயர்ந்த புலவர் பெருமக்களை வணக்கத்துடன் வேண்டுகிறேன்.

திருச்சி.<br>ஏப்ரல் 1954.

அன்புள்ள,<br>கி. ஆ. பெ. விசுவநாதம்

கற்புடைய மங்கையரோடு கலந்து வாழும் வாழ்வும், பெருங்குடியிற் பிறந்த நன்மக்களுடைய உறவும், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் உடையவரது நட்பும் ஆகிய இம் மூன்றும், நல்வாழ்வுக்கேற்ற மருந்து! (1)

குடிப்பிறப்பின் பெருமை குறைவுபடாத ஒழுக்கமும், பெருங்குணம் படைத்தவர் ஏவியதைச் செய்தலும், அறநெறியில் நிற்கின்ற அறிஞர்களின் சொல்வழி நடத்தலும் ஆகிய இம் மூன்றும், மேன்மையுடையவர் தொழில்! (2)

கல்வி அறிவு அற்றவர்களுக்கு உறவினனாக இருத்தலும், மன உறுதியுடைய மனையாளைச் சினங்கொண்டு அடித்தலும், சிற்றறிவாளரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுதலும் ஆகிய இம்மூன்றும், அறியாமையால் வருங் கேடு! (3)

பகைவர் அறியப் பெருஞ் செல்வத்துடன் வாழ்தலும், பசுக்கூட்டங்களின் இடையில் கோல் இன்றி நுழைதலும், துன்பம் செய்யும் கொடியவனைத் துணைவனாகக் கொள்ளுதலும் ஆகிய இம் மூன்றும், சாவை விரும்புஞ் செயல்! (4)

ஆறு குளங்களில் பழகாத் துறைகளில் இறங்கிச் செல்லுதலும், அன்பற்ற மனைவியோடு கூடி வாழ்தலும், வறுமையால் வாடி வேற்றூருக்கு விருந்தினனாகப் போதலும் ஆகிய இம் மூன்றும், துன்பத்தைப் பெறும் வழி. (5)

அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்—[சொல்லின்
அரில் அகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து. (1)

தன்குணங் குன்றாத் தகைமையும் தாவில்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவும் இம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில். (2)

கல்லார்க் கினனாய் ஒழுகலும் காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும்—இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யால்வருங் கேடு. (3)

பகைமுன்னர் வாழ்க்கை செயலும் தொகைநின்ற
பெற்றத்துள் கோலின்றிச் சேறலும்—முன்தன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம்மூன்றும்
சாவ வுறுவான் தொழில். (4)

வழங்காத் துறையிழந்து நீர்ப்போக்கும் ஒப்ப
விழைவிலாப் பெண்டிர்தோள் சேர்வும்—உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகலுமிம் மூன்றும்
அருந்துயரம் காட்டு நெறி. (5)

அறிவாளிகள் போற்றுகின்றபோது நாணம் அடைதலும், அறிவற்ற மக்கள் தூற்றுகின்றபோது பொறுமையடைதலும், தன்னலங் கருதாமல் பிறருக்கு உதவி செய்து வாழ்தலும் ஆகிய இம்மூன்றும், ஊரை ஆளும் வழி! (6)

வாளை மீனைக் கொத்துதற்கு உள்ளான் பறவை முயல் தலும், ஆளும் திறமையில்லாதவன் செல்வக் குடியிற் பிறத்த லும், அவையிற் பேச அஞ்சுகின்றவன் கற்றிருக்கும் நூலறி வும் ஆகிய இம்மூன்றும், ஊமையன் கண்ட கனவு! (7)

உயர்ந்த பழங்குடியில் தோன்றிய நன்மகனும், அறிஞர் களது அவையில் தோன்றும் கல்வியாளனும், அரசன் மகிழப் பகைவரை வெல்லும் வீரமகனும் ஆகிய இம்மூவரும், தம்மைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. (8)

பெருந்தன்மையுள்ளமக்களிடத்திலிருந்து விலகிக்கொள் ளுதலும், உரிமையற்ற பெண்ணின்மீது இச்சைகொண்டு அலைதலும், சிறப்பைத் தராத காரியங்களைச் செய்ய எண்ணித் துணிதலும் ஆகிய இம்மூன்றும், அறிவற்றவர் செயல்! (9)

கல்வி கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர் இல்லாத ஊரும் வழக்கைத் தீர்த்து வைக்கின்ற அறிஞர்களில்லாத சபையும், பகுத்து உண்ணும் தன்மையற்றோர் பக்கத்தில் வாழும் வாழ்வும் ஆகிய இம்மூன்றும், நன்மை பயவாதவை! (10)

பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
திறன்வேறு கூறிற் பொறையும்—அறவினையைக்
காராண்மை போல வொழுகலும் இம்மூன்றும்
ஊராண்மை யென்னுஞ் செருக்கு. (6)

வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆளல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும்—பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சுமன் கண்ட கனா. (7)

தொல்லவையுள் தோன்றுங் குடிமையும் தொக்கிருந்த
நல்லவையுள் மேம்பட்ட கல்வியும்—வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்ந்த வென்றியும் இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறாப் பொருள். (8)

பெருமை யுடையா ரினத்தின் அகறல்
உரிமையில் பெண்டீரைக் காமுற்று வாழ்தல்
விழுமிய வல்ல துணிதலிம் மூன்றும்
முழு மக்கள் காதலவை. (9)

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்—பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்த லில. (10)

அழையாத நாடகத்துக்கு ஆடம்பரத்தோடு செல்லுதலும், குடித்து வெறியானபோது தீய சொற்களைச் சொல்லுதலும், நம்பாத மக்கள் வீட்டிற்கு நாள்தோறும் போய் வருதலும் ஆகிய இம்மூன்றும், வருத்தம் உண்டாக்கிவிடும்! (11)

கடன் படாது உழைத்து உண்ணுகிற தாளாளன், விருந்திருக்க ஒருபோதும் உண்ணாத வேளாளன், அறிவித்ததை மனதிற்கொண்டு செயலாற்றும் அறிஞன் ஆகிய மூவரின் நட்பும், வாழ்வுக்கு இனிமை தரும்! (12)

பிறருடைய குணம் அறிந்து நடக்கும் சுற்றத்தினரும், குடிகளைப் பாதுகாப்பதில் திறமையுடைய அரசனும், அறநெறி அறிந்து தவக்கோலம் பூண்ட அறிஞனும் ஆகிய இம்மூவரும், கிடைத்தற்கு அருமையானவர்! (13)

இயல்பாகவே தவறு செய்துகொண்டிருக்கும் இளையவர், எப்போதும் கோபக்குறியுடனிருக்கும் பெரியவர், வெறுக்கும் சொற்களை விரும்பிச் சொல்லுகின்ற பேதையர் ஆகிய இம்மூவரையும், அணுகார் அறிவுடையார்! (14)

பொய்யான சொற்களைச் சொல்லி வாழுகின்ற புழுகனும், உயர்ந்தவன் தாழ்ந்துவிட்டால் ஏளனம் பண்ணுந் தட்டையும், தன்னலங் கருதி ஒட்டியிருந்து பணிபுரியும் வஞ்சகனும் ஆகிய இம்மூவரும், நட்புக்கு உரியரல்லர்! (15)

விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும் வீழக்
களியாதான் காவா துரையுந்—தெளியாதான்
கூரையுள் பல்காலும் சேறலும் இம்மூன்றும்
ஊரெல்லாம் நோவ துடைத்து. (11)

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்.
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. (12)

சீலம் அறிவான் இளங்கிளை சாலக்
குடியோம்பல் வல்லான் அரசன்—வடுவின்றி
மாண்ட குணத்தான் தவசியென் றிம்மூவர்
யாண்டும் பெறற்கரி யார். (13)

இழுக்கல் இயல்பிற் றிளமை பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதமை—யாண்டும்
செறுவொடு நிற்குஞ் சிறுமை இம்மூன்றும்
குறுகார் அறிவுடை யார். (14)

பொய்வழங்கி வாழும் பொறியறையும் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும்—ஊழினால்
ஒட்டி, வினைநலம் பார்ப்பானும் இம்மூவர்
நட்கப் படாஅ தவர். (15)

பிறருக்குப் பணிபுரிந்து பெரும் புகழை அடைந்தவன், குற்றமற்ற பெண்ணை மனைவியாகப் பெற்றவன், உண்ணும் நீருக்காகக் குளம்,;கிணறு தோண்டியவன் ஆகிய இம்மூவரும் செத்தும் சாகாதவர்! (16)

மூப்பு அடைந்தும் நன்மை செய்ய விரும்பாத மனிதனும் பூத்து நீராடிய மனைவியைச் சேராதிருக்கும் கணவனும், வாய்ச் சண்டையினுள்ளே வெற்றியை விரும்பும் அறிஞனும் ஆகிய இம்மூவரும், கற்ற கல்வியைக் கைவிட்டுவிட்டனர். (17)

விரைவாக வந்துகொண்டிருக்கின்ற மூப்பும், கூடியிருப்பவரிடத்துத் துன்பம் செய்ய வருகின்ற பிரிவும், உடம்பினை உள்ளூர உருக்கித் தின்னும் பிணியும் ஆகிய இம்மூன்றும், கள்வரைவிட அஞ்சக் கூடியவை! (18)

கொல்ல வரும் யானைக்கு முன்னே ஓடும் அறிவிலியும் இரவிலே பிறர்மனை சென்று இச்சித்து நிற்கும் காமுகனும், நஞ்சுள்ள பாம்பினை ஆட்டிக்கொண்டிருக்கும் மூடனும் ஆகிய இம்மூவரும், இதனாலேயே இறந்துபடுவர்! (19)

பிறரது பொருள் கொள்ளப் பேராசைப் படுதலும். வீட்டார் பசித்திருக்க வீண் சோம்பல் கொள்ளுதலும், கல்லாத மனிதன் எனப் பல்லோரால் இகழப்படுதலும் ஆகிய இம்மூன்றும், எல்லார்க்கும் துன்பந்தரும் (20)

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்
—உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவ உடம்பெய்தி னார். (16)

மூப்பின்கண் நன்மைக் ககன்றானும் கற்புடையாள்
பூப்பின்கண் சாராத் தலைமகனும்—வாய்ப்பகையுள்
சொல்வென்றி வேண்டும் இலிங்கியும் இம்மூவர்
கல்விப் புணைகைவிட் டார். (17)

ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்
கிருதலையு மின்னாப் பிரிவும்—உருவினை
யுள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியு மிம்மூன்றுங்
கள்வரி னஞ்சப் படும். (18)

கொல்யானைக் கோடுங் குணமிலியும் எல்லிற்
பிறன்கடை நின்றொழுகு வானும்—மறந்தெரியா
தாடும்பாம் பாட்டு மறிவிலியு மிம்மூவர்
நாடுங்காற் றூங்கு பவர். (19)

ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொளலும்—கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலும் இம்மூன்றும்
எல்லார்க்கு மின்னா தன. (20)

வருமானத்தில் கால்பங்கை வறுமையுற்றவருக்கு வழங்குதலும், யாவரும் அறிய வீரனாக வாழ்தலும், எல்லாவற்றையும் கற்று நல்லவைகளை அறிதலும் ஆகிய இம்மூன்றும், நற்குணமுடையவர் செயல்! (21)

காண்பதிலெல்லாம் பற்றுகொள்ளுகின்ற கயிற்றுவிலங்கும், பல பொருள்களிலும் பிடிப்பு நீங்காமல் ஓடுகின்ற ஆசையும், வீணாகப் பிறரிடத்து பொய்த்துச் சொல்லுகின்ற சொல்லும் ஆகிய இம்மூன்றும், நல்லதல்லாதவை! (22)

ஏழைக்கு இரங்கிப் பொருள் கொடுக்கும் குணமும், மானம் உடையவரது குற்றத்தை மன்னித்து வாழும் வாழ்வும், பல பொருள்களிலும் நினைவைச் செல்லவிடாத ஆற்றலும் ஆகிய இம்மூன்றும், நல்லதைச் சேமிக்கும் வழி! (23)

வேசையினுடைய வாயிலிருந்து வருகின்ற இன்சொல்லும், தூண்டிலில் மீனுக்கு இரையாக வைத்துள்ள பூச்சியும், நெஞ்சில் உரம் உடைய பகைவனின் வணக்கமும் ஆகிய இம்மூன்றும், அழிக்கச் செய்யும் செயல்! (24)

அறிஞர்களை மதியாது செருக்கித் திரிகின்ற சிறியோன், கற்பை விலைக்கு விற்று உயிர் வாழுகின்ற பெண், நல்லோர்க்கு வைத்த அறச்சாலையை அழித்த கொடியோன் ஆகிய இம்மூவரிடத்தும், உயர்ந்தோர் உணவருந்தார். (25)

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல் இம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். (21)

பற்றென்னும் பாசத் தளையும் பலவழியும்
பற்றறா தோடும் அவாத்தேரு—தெற்றெனப்
பொய்த்துறை யென்னும் பகையிருளும் இம்மூன்றும்
வித்தற வீடும் பிறப்பு. (22)

தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமுந்—தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தனையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு. (23)

காண்டகு மென்றோட் கணிகைவா யின்சொல்லுந்
தூண்டிலின் உட்பொதிந்த தேரையு—மாண்டசீர்க்
காழ்த்த பகைவர் வணக்கமும் இம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கும் அளறு. (24)

செருக்கினால் வாழுஞ் சிறியவனும் பைத்தகன்ற
அல்குல் விலைபகரும் ஆய்தொடியும்—நல்லவர்க்கு
வைத்த வறப்புறங் கொன்றானும் இம்மூவர்
கைத்துண்ணார் கற்றறிந் தார். (25)

இயன்றதை அறிந்து பெற்று மகிழும் விருந்தினனும், நடைபெறவிருந்த கொலையைத் தடுத்து வாழ்பவனும், உறுதியாக ஒழுக்கத்தைக் கைகொண்டுள்ள ஆசிரியனும் ஆகிய இம்மூவரும், உயர்ந்தோர் எனப்படுவர். (26)

உண்ணுங்கால் உடல் குளித்து உண்ணுதலும், எது வரினும் வழக்கோரம் சொல்லாது வாழ்தலும், உயிர் நீர்ப்பினும் பெருமை குன்றாது நடத்தலும் ஆகிய இம் மூன்றும், தூய்மையுடையோர் செயல்! (27)

வெகுண்டு பேசி வெற்றி பெற நினைப்பவனும், பெற முடியாதவற்றைப் பெற விரும்பி அலைபவனும், பிறன் கற்ற கல்வியில் குற்றம் கூறி வாழ்பவனும் ஆகிய இம்மூவரும் பயனற்ற செயல் செய்வோர்! (28)

பெண் விரும்பிப் பின்வரினும் தன் நேர்மை தவறாமை, அன்போடு வரும் பொருளிடத்தும் ஆசை சிறிதும் கொள்ளாமை, இன்பம் துய்க்க எண்ணி வாழ்நாளை விரும்பாமை ஆகிய இம்மூன்றும், நூலறிவுடையோர் நோக்கம்! (29)

தன்னைத் தேடி வந்த மக்களை வெறுத்தொதுக்காத் தன்மையும், செல்வம் பெற்ற காலத்தும் உறவை மறக்காத வாழ்வும், பிறரது செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்ளாத பண்பும் ஆகிய இம்மூன்றும், புகழைப் பெறும் வழி! (30)

ஒல்வ தறியும் விருந்தினனு மாருயிரைக்
கொல்வ திடைநீக்கி வாழ்வானும்—வல்லிதிற்
சீல மினிதுடைய வாசானும் இம்மூவர்
ஞால மெனப்படு வார். (26)

உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றுந்
தூஉய மென்பார் தொழில். (27)

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானுங்—கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானும் இம்மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார். (28)

பெண்விழைந்து பின்செலினுந் தன்செலவிற்
[குன்றாறை
கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை
மண் விழைந்து வாழ்நாள் மதியாமை இம்மூன்றும்
நுண்விழைந்த நூலவர் நோக்கு. (29)

தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்காறு இகந்தானும் இம்மூவர்.
நின்ற புகழுடை யார் (30)

பல அவைகளுக்கும் சென்று நல்லவைகளைக் கொள்ளுத லும், பகுத்து உண்டு வாழ்ந்து இல்லறத்தை நடத்துதலும், தன் முயற்சிகொண்டு சிறப்பாக ஒன்றைச் செய்தலும் ஆகிய இம்மூன்றும் கேள்வியாற் பெறுகின்ற பயன். (31)

நூலினைப் படித்து அதன் உண்மைப் பொருளை அறிதலும், உண்மைக்கு மாறான சொற்களை எப்போதும் சொல்லாதிருத்தலும், உயர்ந்த சொற்களைச் சிற்றின மல்லாதவரிடத்தே சொல்லுதலும் ஆகிய இம்மூன்றும், கற்றறிந்த மக்கள் செயல். (32)

தன் ஆட்சிக்கு அடங்கி வாழ்கின்ற குடிமக்களும், குடி மக்களைத் தழுவி வாழும் திறமையுள்ள அமைச்சனும், வேலின் பூண்போல் திட்பமுடைய காவலும் ஆகிய இம் மூன்றும், வேந்தனால் விடப்படாதவை. (33)

அறநெறிகளை வழுவாது நடத்தும் அந்தணனும், அறநூல்களை ஆராய்ந்து மாறுபடாது நடக்கும் மன்னனும், தவறு செய்து சிறை புகுந்து புலம்பாத மக்களும் ஆகிய இம் மூவரும், சிறந்தோர் எனப்படுவர். (34)

கடல் அலைபோல் மனம் அலையாத அறிவை யுடையவர், கல்வி கேள்விகளால் நூல்களின் உண்மையை அறிந்தவர், குற்றம் செய்யும் தீக்குணத்தைவிட்டு விலகி வாழ்பவர் ஆகிய இம்மூவரும், உண்மையைக் கண்டறிந்தவர். (35)

பல்லவையுள் நல்லவை கற்றலும் பாத்துண்டாங்கு
இல்லற முட்டா தியற்றலும்—வல்லிதின்
தாளி னொருபொரு ளாக்கலும் இம்மூன்றுங்
கேள்வியு ளெல்லாம் தலை. (31)

நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா
வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை—நன்மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன். (32)

கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்பும் இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். (33)

மூன்று கடன்கழித்த பார்ப்பானும் ஓர்ந்து
முறைநிலை கோடா அரசுஞ்—சிறைநின்று
அலவலை இல்லாக் குடியும் இம்மூவர்
உலகம் எனப்படு வார். (34)

முந்நீர்த் திரையின் எழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
மைந்நீர்மை இன்றி மயலறுப்பான் இம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர். (35)

ஊன் தின்று உயிர்களிடத்து இரக்கம் உடையோன் என்பவனும், முயற்சி ஏதும் செய்யாமல் யாவும் விதி செய்யும் என்பவனும், யாகம் செய்து உயிர்களைக் கொன்று தின்று வாழ்பவனும் ஆகிய இம்மூவரும் உண்மையை உணராதவர்! (36)

செல்வம் குறைந்தபோது காணப்படும் நண்பனுடைய அன்பும், நற்குணங்களின் நிறைவினாலே காணப்படும் உயர்ந்த குடிப்பிறப்பும், தூய்மையான உள்ளத்தில் காணப்படும் சிறந்த உறுதிப்பாடும் ஆகிய இம்மூன்றும், தன்மையுடையார் செயல்! (37)

தன்னைத் தானே புகழ்ந்து போற்றிக்கொள்ளுதலும், அடக்கமில்லாமல் வீணாகக் கோபத்தை வளர்த்தலும், பிறருடைய பொருள்களில் இச்சைகொள்ளும் தீக்குணமும் ஆகிய இம் மூன்றும், செல்வத்தை அழித்துவிடும்! (38)

வேசையரை விரும்பிக் கூடும் இழிசெயலும், மயக்கத்தை விரும்பிக் கள்ளை உண்டு வாழ்தலும், பெரியோர் சொல்லைத் தட்டிப் பொய்யும் சூதும் விரும்புதலும் ஆகிய இம்மூன்றும், நன்மையில்லாதார் தொழில்! (39)

மனத்தில் உண்டாகும் கோபத்தை அடக்கும் வலிமையும், பெண்கள் போற்றுகின்ற ஒழுக்கத்தைக் காத்து வாழ்தலும், பிறர்க்குப் பகுத்துக் கொடுத்து உண்ணும் செய்கையும் ஆகிய இம் மூன்றும், நல்லறிவாளார் செயல்! (40)

ஊனுண் டுயிர்கட் கருளுடையே மென்பானுந்
தானுடன் பாடின்றி வினையாக்கு மென்பானுந்
காமுறு வேள்வியிற் கொல்வானும் இம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட வாறு. (36)

குறளையுள் நட்பளவு தோன்றும் உறலினிய
சால்பினிற் றோன்றும் குடிமையும்—பால்போலுந்
தூய்மையுட் டோன்றும் பிரமாணம் இம்மூன்றும்
வாய்மை யுடையார் வழக்கு. (37)

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. (38)

புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டீர்த் தோய்தல்
கலமயக்கங் கள்ளுண்டு வாழ்தல்—சொலைமுனிந்து
பொய்ம்மயக் கஞ்சூதின் கண் தங்கல் இம்மூன்றும்
நன்மையி லாளர் தொழில். (39)

வெகுளி நுணுக்கும் விறலு மகளிர்கட்(கு)
ஒத்த வொழுக்க முடைமையும்—பாத்துண்ணும்
நல்லறி வாண்மை தலைப்படலும் இம்மூன்றும்
தொல்லறி வாளர் தொழில். (40)

ஏழைகளுக்கு இரங்கி அவரது துன்பத்தைத் துடைத்தலும், செல்வம் குறைந்தாலும் குடிப்பெருமை குன்றாமல் வாழ்தலும், அன்பை வளர்த்து நண்பரைப் போற்றி உயர்த்தலும் ஆகிய இம்மூன்றும், தலைசிறந்த அறம். (41)

சூதாடிப் பொருள் சேர்க்க விரும்பாத நற்குணமும், பழகினும் பார்ப்பாரைத் தீப்போல எண்ணுதலும், செய்யும் தொழிலை விரும்பிக் கைக்கொள்ளலும் ஆகிய இம்மூன்றும், வேளாளர்களுக்கு அழகு! (42)

வாயினால் தீமைகளைச் சொல்லாது வாழ்தலும், உடம்பினால் தீமைகளைச் செய்யாது வாழ்தலும், உள்ளத்தால் தீமைகளை எண்ணாது வாழ்தலும் ஆகிய இம்மூன்றும், உயர்ந்தோரது பண்பு! (43)

விருந்தினர் புறத்திருக்க உண்டு மகிழ்தலும், பெண்களைத் தனித்திருக்க விட்டு வாழ்தலும், இல்லாதார்க்கு ஈயாது பொருளைச் சேர்த்தலும் ஆகிய இம்மூன்றும், அறிவுடையார்க்கு ஆகாதவை! (44)

செய்யமுடியாதவனைச் செய்யச் சொல்லித் துன்புறுத்துபவனும், இரப்பவர்க்கு இல்லையென்று கூறி உள்ளதை மறைப்பவனும், சாவு நெருங்கி வருவதை அறிந்தும் அறியாது வாழ்பவனும் ஆகிய இம்மூவரும், தீமையைச் சேர்கின்றவர்! (45)

அலரிந்தார்க் கொன்றீந்த புகழுந் துளங்கினுந்
தன்குடிமை குன்றாத் தகைமையும்—அன்போடு
நாள்நாளு நட்டார்ப் பெருக்கலும் இம்மூன்றுங்
கேள்வியு ளெல்லாந் தலை. (41)

கழகத்தால் வந்த பொருள்கா முறாமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்
உழவின்கட் காமுற்று வாழ்தல்இம் மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு. (42)

வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை யடங்குதல் திப்பியமாம்—பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள். (43)

விருந்தின்றி யுண்ட பகலுந் திருந்திழையார்
புல்லப் புடைபெயராக் கங்குலும்—இல்லார்க்
(கொன்(று)
ஈயா தொழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்
நோயே யுரனுடை யார்க்கு. (44)

ஆற்றானை யாற்றென் றலைப்பானும் அன்பி
யேற்றார்க் கியைவ கரப்பானும்—கூற்றன் றிம்
வரவுண்மை சிந்தியா தானுமிம் மூவர்
நிரயத்துச் சென்றுவீழ் வார். (45)

சிறந்த நடையில்லாத செழிப்புள்ள குதிரையும், மேலிருக்கத் தகுதியற்ற வலிமையுள்ள யானையும், சினந்து பேசும் குணமுடையவனின் கல்விச்சாலையும் ஆகிய இம் மூன்றும், அறிவுடையாரை இழந்துவிடும். (46)

இனிய சொல்லையுடைய சிறந்த பெண்டிரும், நல்ல வழியில் முயன்று தேடிய செல்வமும், நாவுக்கு இனிதாய்ச் சமைத்த நல்லுணவும் ஆகிய இம்மூன்றும், காப்பாற்றுதற் குரிய பொருள். (47)

பிறர் வைத சொற்களை இன்சொல்லாகக் கொள்பவனும், நெய் வார்த்த சோறு எனக் கூழை மதித்து உண்பவனும், கசப்பில் இனிப்பைக் கண்டு வாழ்கின்றவனும் ஆகிய இம்மூவரும், உண்மையைக் காண்கின்றவர். (48)

சொற்புத்தி கேட்டு நடவாத பிள்ளையும், நாவடக்க மில்லாமல் கண்டதைப் பேசும் கணவனும், பொய் கூறிப் பொருள்களை அழிக்கும் மனைவியும் ஆகிய இம்மூவரும் வாழத் தகுதியற்றவர்! (49)

வரிப்பொருள்களை விரும்பிக் குடிகளை வருத்தும் அரசனும், உண்மையை மறைத்துப் பொய் சொல்லி வாழும் மனிதரும், வீட்டிலிருந்து வரம்பு கடந்து நடக்கும் மனைவியும் ஆகிய இம்மூவரும், அழிவைத் தேடுபவர்! (50)

கால்தூய்மை யில்லாக் கலிமாவுங் காழ்கடிந்து
மேல்தூய்மை யில்லாத வெங்களிறுஞ்—சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளிஇம் மூன்றும்
குறுகார் அறிவுடை யார். (46)

சில்சொற் பெருந்தோள் மகளிரும் பல்வகையுந்
தாளினால் தந்த விழுநிதியும்—நாடோறும்
நாத்தளிப்ப ஆக்கிய உண்டியும் இம்மூன்றும்
காப்பிகழல் ஆகாப் பொருள். (47)

வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்
சோறென்று கூழை மதிப்பானும் – ஊறிய [பெய்த
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். (48)

ஏவாது மாற்றும் இளங்கிளையும் காவாது
வைதெள்ளிச் சொல்லுந் தலைமகனும்—பொய்
[தெள்ளி
அம்மனை தேய்க்கும் மனையாளும் இம்மூவர்
இம்மைக் குறுதியில் லார். (49)

கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழையறுக்குங் கோள். (50)

வருவாய் இழந்து வருந்தினாலும் துணைவர் துணைவரே! கலந்து ஒட்டி உறவாடினாலும் பகைவர் பகைவரே! வருந்தி அழுது வேண்டினாலும் ஈயாதார் ஈயாதாரே! இம் மூவரும் ஆராய்ந்தால் தோன்றுபவர்! (51)

அழகிய கண்ணுக்கு அணிகலன் இரக்கமுடைமை, சிறந்த பெண்ணுக்கு அணிகலன் நாணமுடைமை, நல்ல வாழ்வுக்கு அணிகலன் கல்வியுடைமை ஆகிய இம்மூன்றும், கருத்துடைய மக்களிடம் உண்டு! (52)

குருடன் தன் மனைவியின் அழகைப்பற்றிப் பேசுவதும், கல்வி இல்லாதவன் கவி கூறி உரை விரிப்பதும், இசை அறிவு இல்லாதவன் யாழ் கேட்டு மகிழ்தலும் ஆகிய இம்மூன்றும், அவரவர் அறியாதவை! (53)

தனக்கு உதவி செய்யாதவரைச் சேர்ந்து இருத்தலும், செய்ய முடியாததைச் செய்ய சினங்கொண்டு உறுதிகூறலும், இல்லாத குற்றங்களைப் பிறர்மீது ஏற்றிச் சொல்லலும் ஆகிய இம்மூன்றும், தெளிவில்லாதவர் செயல்! (54)

வெளிப்படுத்தக் கூடாதவைகளை வெளியிற் சொல்லும் நண்பனும், பொறுமைக் குணத்தைவிட்டு விலகி வாழும் பெண்ணும், எப்பொழுதும் பகை உணர்ச்சி கொண்டுள்ள ஏலவாளும் ஆகிய இம்மூவரும், ஒற்றர் எனப்படுவர்! (55)

தூர்ந்தொழுகிக் கண்ணும் துணைகள் துணைகளே
சார்ந்தொழுகிக் கண்ணும் சலவர் சலவரே
ஈந்தகல் இன்னாக் கயவர் இவர்மூவர்
தேர்ந்தக்கால் தோன்றும் பொருள். (51)

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்வியிம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள. (52)

குருடன் மனையாள் அழகும் இருள்தீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும்—பற்றிய
பண்ணின் தெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணின் தெரியாப் பொருள். (53)

துன்பயன் தூக்காரைச் சார்தலும் தாம்பயவா
நன்பயன் காய்வின்கண் கூறலும்—பின்பயவாக்
குற்றம் பிறர்மேல் உரைத்தலும் இம்மூன்றும்
தெற்றென வில்லார் தொழில். (54)

அருமறை காவாத நட்பும் பெருமையை
வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும்—[யாண்டானும்
செற்றங்கொண் டாடும் சிறுதொழும்பும் இம்மூவர்
ஒற்றாள் எனப்படு வார். (55)

ஒருவன் இளமையிற் கற்றறிந்த கல்வியும். பின்பு பெற்றோரை வழிபட்டுவந்த ஒழுக்கமும், பிறகு பெரியோரைச் சார்ந்து வாழ்தலும் ஆகிய இம்மூன்றும், உயர்வை அடையும் வழி! (56)

தாளத்திற்கு ஏற்றவாறு பாடாத பாட்டும், பிச்சை வாங்கி யுண்பவன் செய்யும் ஆரவாரமும், அண்டியிருந்த வீட்டுப் பொருள்களில் ஆசைப்படுதலும் ஆகிய இம்மூன்றும் கேட்பதற்கு இனிமையற்றவை! (57)

பழகிவரும் நண்பர்களின் துன்பத்தை நீக்கிக்காப்பாற்று தலும், சுற்றத்தார் மகிழும்படி அவர்களை அன்போடு தழுவிக் கொள்ளுதலும், நல்லோரை இன்சொல்லால் நட்பாடக் கொள்ளுதலும் ஆகிய இம்மூன்றும், செல்வர் அடையும் சிறப்பு! (58)

சுற்றத்தார்க்கு உதவி செய்யாதவனுடைய செல்வமும், பலன் தரும் காலத்தில் பயிரைப் பாதுகாக்காதவனுடைய உழவும், இளமையில் அடங்காமல் கள்ளுண்டு வாழ்பவனுடைய குடிப்பிறப்பும் ஆகிய இம்மூன்றும், இருப்பது போல கெடும். (59)

பேயைப்போலப் பெரும் பசியெடுத்து அலைதலும், விலங்கைப் போல இச்சித்து அலைந்து திரிதலும், மனிதனா இருந்தும் வறுமையால் அறிவற்று வாழ்தலும் ஆகிய இம் மூன்றும், துன்பப் பிறப்பாய் விடும்! (60)

முந்தை எழுத்தின் வரவுணர்ந்த பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு—வந்த
ஒழுக்கம் பெருநெறி பேர்தலிம் மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு. (56)

கொட்டி யளந்தமையாப் பாடலும் தட்டித்துப்
பிச்சைபுக் குண்பான் பிளிற்றலும்—துச்சிருந்தான்
ஆளுங் கலங்கா முறுதலும் இம்மூன்றும்
கேள்வியுள் இன்னா தன. (57)

பழமையை நோக்கி அளித்தல் கிழமையால்
கேளிர் உவப்பத் தழுவுதல்—கேளிராய்த்
துன்னிய சொல்லால் இனம்திரட்டல் இம்மூன்றும்
மன்னற் கிளையான் தொழில். (58)

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்—இளையனாய்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். (59)

பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும் பாஅய்
விலங்கின் பிறப்பின் வெருவும்—புலந்தெரியா
மக்கள் பிறப்பின் நிரப்பிடும்பை இம்மூன்றும்
துக்கப் பிறப்பாய் விடும். (60)

ஆவல் கொள்ளும் உணர்ச்சிகளை அடக்கி வாழ்வதும், நாட்டிற்கு வரும் துன்பங்களை நன்கறிந்து காத்தலும், பகை மன்னரின் நாட்டு நிலைமை அறிந்து வருதலும் ஆகிய இம் மூன்றும், சிறந்த அமைச்சர் செயல்! (61)

பிறர் தனக்குச் செய்த நன்மையை உணராது வாழ்பவனும், பெரியோர்கள் இருக்கும் அவையில் கொடுஞ்சொல் கூறும் மகனும், அடைக்கலமாக வந்த பொருளைத் திருடி மறைப்பவனும் ஆகிய இம்மூவரும், புகழ் இழந்து போகின்றவர். (62)

உடலைப் பாதுகாக்கத் தெரியாத மக்களுடைய நட்பும், விருந்து செய்ய அஞ்சுகின்ற மனைவியுடன் வாழும் வாழ்வும், பெருந்தன்மையில்லா மக்களுக்கருகில் குடியிருந்து வருவதும் ஆகிய இம்மூன்றும், நன்மை தராதவை! (63)

விருந்து ஓம்புதலில் விருப்பங் கொள்ளுதலும், மனை அறத்தை மகிழ்வோடு காப்பாற்றுதலும், நன்மக்களைப் பெற்று நல்வழி வளர்த்தலும் ஆகிய இம்மூன்றும், பெண்ணுக்குப் பெருமை தரும்! (64)

எப்போதும் பயந்துகொண்டிருக்கும் மனமும்; அனுபவித்த பின்பும் அடங்காத ஆசையும், உண்மையை அறியவொட்டாத கோபமும் ஆகிய இம்மூன்றும், தன்னையே தீய்த்துவிடும்! (65)

ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்
எய்துவ தெய்தாமை முற்காத்தல்—வைகலும்
மாரேற்கும் மன்னர் நிலையறிதல் இம்மூன்றும்
சீரேற்ற பேரமைச்சர் கோள். (61)

நன்றிப் பயன்தூக்கா நாணிலியும் சான்றோர்முன்
மன்றில் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இழந்துவாழ் வார். (62)

நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாத்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்த லில. (63)

நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய்—தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன். (64)

அச்சம் அலைகடலின் தோன்றலும் ஆர்வுற்ற
விட்டகல கில்லாத வேட்கையும்—கட்டிய
மெய்ந்நிலை காணா வெகுளியும் இம்மூன்றும்
தந்நெய்யில் தாம்பொரியு மாறு. (65)

கொழுநன் இல்லாத பெண் அடைகின்ற பூப்பும், வேலையாள் இல்லாதவன் விரலிலுள்ள மோதிரமும், முறை தவறி வாழ்கின்ற அரசனது ஆட்சியும் ஆகிய இம்மூன்றும், சிறப்பு அடைவதில்லை! 66)

கோபித்து எதிர்நின்று பேசும் மனைவி, ஒழுங்கு மறந்து வேலை செய்யும் ஆள், மனத்தில் வஞ்சம் கொண்டு வாழும் சுற்றம் ஆகிய இம்மூன்றும், நொந்தார்க்குப் பரிகாரமில்லை! (67)

வறுமையுடையார்க்கு வழங்கச் செல்வம் சேர்த்தலும், ஏழ்மை வந்தபோதும் நெறி தவறாது வாழ்தலும், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருக்கும் குணமும் ஆகிய இம்மூன்றும், நல்ல மனிதனின் பண்பு. (68)

தொழில்களைத் திறமையாகச் செய்யும் எருது, மணமற்றிருந்தும் நிறை பெற்றிருந்த கன்னி, வழிமாறிப் பசித்து நொந்து வந்த விருந்து ஆகிய இம்மூன்றும், பெறுதற்கரிய பொருள். (69

குளிர்சோலை வைத்துக் குளம் தோண்டி வைத்தவன், அறநூல்களைக் கற்று அதன்படி நடப்பவன், நல்ல வழியில் தேடிப் பிறருக்குக் கொடுத்து உண்பவன் ஆகிய இம்மூவரும், செல்வர் எனப்படுவார்! (70)

கொழுநனை இல்லாள் கறையும் வழிநிற்கும்
சிற்றாளில் லாதாண்கைம் மோதிரமும் - பற்றிய
கோல்கோடி வாழும் அரசனும் இம்மூன்றும்
சால்போடு பட்ட தில. (66)

எதிர்நிற்கும் பெண்ணும் இயல்பில் தொழும்பும்
செயிர்நிற்குஞ் சுற்றமும் ஆகி—மயிர் நரைப்ப
முந்தைப் பழவினையாய்த் தின்னும் இவைமூன்றும்
நொந்தார் செயக்கிடந்த தில். (67)

இல்லார்க்கொன் றீயும் உடைமையும் இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும்—எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத் தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள. (68)

அருந்தொழில் ஆற்றும் பகடும் திருந்திய
மெய்நிறைந்து நீடிருந்த கன்னியும்—நொந்து
நெறிமாறி வந்த விருந்துமிம் மூன்றும்
பெறுமா றரிய பொருள். (69)

காவோ டறக்குளந் தொட்டானும் நாவினால்
வேதம் கரைகண்ட பார்ப்பானும்—தீதிகந்
தொல்வதுபாத் துண்ணும் ஒருவனும் இம்மூவர்
செல்வ ரெனப்படு வார். (70)

உடுத்தும் ஆடையின்றி நீராடும் செயல், பெண்கள் பிறரோடு சண்டையிடும் காட்சி, கொடை வழங்கிய மக்கள் பெற்ற வறுமை ஆகிய இம்மூன்றும், காணச் சகியாதவை! (71)

நல்ல உள்ளம் படைத்தவனைக் காண்கின்ற கொடுமை, அறச்செயலை நினைந்து நடப்பவனைக் காண்கின்ற பாவம், கொலை செய்து வாழ்பவனைக் காண்கின்ற உயிர்கள் ஆகிய இம்மூன்றும், அவரவரைச் சேர அஞ்சும். (72)

பிச்சை எடுத்தே பொருள் சேர்க்க எண்ணும் மூடன், விலைமகளிடத்திலிருந்து அன்பைப் பெற விரும்பும் அறிவிலி, விரிந்த கடலூடு சென்று நீந்த எண்ணுகின்ற பேதை ஆகிய இம்மூவரும், இயலாததைச் செய்பவர்! (73)

கொலை செய்து ஊன் தின்று வாழும் கொடியவனும், பெரியோர் தழுவி மகிழும்போது தானும் தழுவும் பேதையும் இரப்பவரைக் கண்டு எள்ளி நகையாடும் தீயோனும் ஆகிய இம்மூவரும், எதையும் கடைப்பிடியாதவர்! (74)

வரையாது கொடுப்பவனிடம் கூடியுள்ள செல்வமும், உள்ளத்தில் உணர்ச்சியுடையவன் கற்ற கல்வியும், தன்னைச் சேர்ந்தவர்க்குச் செய்ய வேண்டியதைச் செய்யும் அறிவும் ஆகிய இம்மூன்றும், வைரம் பாய்ந்தவையாம்! (75)

உடுத்தாடை யில்லாதார் நீராட்டும் பெண்டீர்
தொடுத்தாண் டவைப்போர் புகலும்—கொடுத்
[தளிக்கும்
ஆண்மை யுடையவர் நல்குரவும் இம்மூன்றும்
காண அரியவென் கண். (71)

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறம் நினைப்பானை அல்பொருள் அஞ்சும்
மறவனை யெவ்வுயிரும் அஞ்சுமிம் மூன்றும்
திறவதில் தீர்ந்த பொருள். (72)

இரந்துகொண் டொண்பொருள் செய்வ
[லென்பானும்
பரந்தொழுகும் பெண்பாலைப் பாசமென் பானும்
விரிகட லூடு செல்வானு மிம்மூவர்
அரிய துணிந்துவாழ் வார். (73)

கொலைநின்று தின்றொழுகு வானும் பெரியவர்
புல்லுங்கால் தான்புல்லும் பேதையும்—இல்லெனக்
கொன்
றீகென் பவனை நகுவானும் இம்மூவர்
யாதுங் கடைப்பிடியா தார். (74)

வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும் உள்ளத்
துணர்வுடையா னோதிய நூலும்—புணர்வின்கண்
தக்க தறியுந் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றிக் காழத்த மரம். (75)

மழைக் காலத்தில் தேடிவந்த விருந்தினனும், மனம் மாறுபட்டுப் பணி செய்யும் வேசையும், வெற்றியையே பெரிதாகக் கருதும் வீரனும் ஆகிய இம்மூவரும், போற்றுதலுக்குரியராவர். (76)

அறிவற்ற கீழ்மக்களை எப்போதும் சேராதிருத்தலும், அன்புடைய பெரியோரை ஒருபோதும் பிரியாது வாழ்தலும், எப்போதும் பழி வாராமற் காத்துக்கொள்ளும் பண்பும் ஆகிய இம்மூன்றும், பெருங்குடியிற் பிறந்தவர்க்கு உண்டு! (77)

உள்ளத்தால் தீமையை ஒருபோதும் எண்ணாமை, உடலால் தீமையை எப்போதும் செய்யாமை, வாயால் தீமையை என்றென்றும் சொல்லாமை ஆகிய இம்மூன்றும், அறநெறி நின்றோர் செயல்! (78)

பழிக்கு அஞ்சி வாழ்கின்ற வாழ்வை மறந்த மகனும், செல்வம் குறைவதைக் கண்டு நன்னெறி தவறிய அறிவிலியும் மனையாளுக்கு அஞ்சிக் கொடுப்பதை நிறுத்தும் பேதையும் ஆகிய இம்மூவரும், அறிஞர் நெஞ்சிற்கு நோய்! (79)

முறை தெரிந்து செய்ய முடியாதவன் பெற்ற பதவியும், உள்ளத்தில் வலிமையில்லாதவன் கொண்ட உறுதியும், சிறந்த ஒழுக்கம் இல்லாதவன் பெற்ற அழகும் ஆகிய இம்மூன்றும், வீணாகப்போன விதை. (80)

மாரிநாள் வந்த விருந்தும் மனம்பிறிதாய்க்
காரியத்திற் குன்றாக் கணிகையும்—வீரியத்து
மாற்றம் மறுத்துரைக்குஞ் சேவகனும் இம்மூவர்
போற்றற் கரியார் புரிந்து. (76)

கயவரைக் கையிகந்து வாழ்தல் நயவரை
நள்ளிருளுங் கைவிடாது நட்டொழுகல்—தெள்ளி
வடுவரின வாராமல் காத்தலிம் மூன்றும்
குடிமா சிலார்க்கே யுள. (77)

தூய்மை யுடைமை துணிவாம் தொழிலகற்றும்
வாய்மை யுடைமை வனப்பாகும்—தீமை
மனத்தினும் வாயினுஞ் சொல்லாமை மூன்றும்
தவத்தில் தருக்கினார் கோள். (78)

பழியஞ்சான் வாழும் பசுவும் அழிவினால்
கொண்ட அருந்தவம் விட்டானுல்—கொண்டிருந்
தில்லஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்
நெல்லுண்டல் நெஞ்சிற்கோர் நோய். (79)

முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும்—நிறையொழுக்கம்
தேற்றாதான் பெற்ற வணப்பும் இவைமூன்றும்
தூற்றுன்கண் தூவிய வித்து. (80)

வந்தவர்க்கெல்லாம் தோள் வழங்கி வாழும் வேசையும், நாள் கிழமை பார்த்துச் சூதாடச் செல்லும் சூதனும், செம்பைப் பொன்னாக்கிப் பொருள் தேட முயலும் அறிவிலியும் ஆகிய இம்மூவரும், ஆசைக் கடலுள் அழுந்துபவர். (81)

நல்லவன் என்று நற்குணங்கள் உள்ளவர்களாலே கருதப் பெறுதலும் நண்பன் என்று பண்புடையவர்களாலேயே கருத பெறுதலும், ஏற்றுக்கொள்ளாத மக்களிடத்து எதையும் விரும்பிக் கூறாமையும் ஆகிய இம்மூன்றும், நல்லோர் வழங்கும் நெறி! (82)

உப்பு அதிகமாக இருந்தாலும் நீர் பட்டால் அழிந்து விடும்; நட்பு நெருக்கமாயிருந்தாலும் பொய் வழங்கக் கெட்டுவிடும்; நடுநிலையுடையோர் எதிர்பாராது பிறருக்கு வழங்குவார். நீர் படியாமை, பொய் சொல்லாமை, உபசரித்தல் ஆகிய இம்மூன்றும் நல்வழியைத் தூர்க்கா. (83)

நீர் வரும் வழி நன்கமையாத குளமும், வயிறாரத் தாய்ப் பாலுண்ணாத குழவியும், இளமையிற் கல்வி கற்காத மக்களும் ஆகிய இம்மூன்றும், வறுமையால் வாடுபவர். (84)

பகைவரின் செயலை அவர்கள் அறியாது காணும் திறமையும், நிகழ்ச்சிகள் எதையும் மறவாதிருக்கும் கூர்மையும், உள்ளத்திலுள்ளதை உணர்ச்சியோடு சொல்லும் ஆற்றலும் ஆகிய இம்மூன்றும், அறிவுடைய ஒற்றரின் குணம். (85)

தோள்வழங்கி வாழும் துறைபோன கணிகையும்
நாள்கழகம் பார்க்கும் நயமிலாச் சூதனும்
வாசிகொண் டொண்பொருள்செய்வானும் இம்மூவர்
ஆசைக் கடலுளாழ் வார். (81)

சான்றாருள் சான்றான் எனப்படுதல் எஞ்ஞான்றும்
தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல்—பாய்ந்
தெழுந்து
கொள்ளாருள் கொள்ளாத கூறாமை இம்மூன்றும்
நல்லாள் வழங்கும் நெறி. (82)

உப்பின் பெருங்குப்பை நீர்படியின் இல்லாகும்
நட்பின் கொழுமுனை பொய்வழங்கின் இல்லாகும்
செப்பம் உடையார் மழையனையர் இம்மூன்றும்
செப்ப நெறிதூரா வாறு. (83)

வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும்—சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார். (84)

எள்ளப் படுமரபிற் றாகலும் உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும் முட்டின்றி
உள்பொருள் சொல்லும் உணர்ச்சியும் இம்மூன்றும்
ஒள்ளிய ஒற்றாள் குணம். (85)

உயிர்களிடத்துள்ள அன்பிலிருந்து விலகி வாழ்தலும், கற்புநெறியைப் பொருளாசை கொண்டு கைவிடுதலும், நட்புக் காரணமாக நடுநிலைமையிலிருந்து வழுவுதலும் ஆகிய இம்மூன்றும், தவறு விளைக்கும் பகை. (86)

கொலைத்தொழிலை விருப்பத்தோடு செய்து வருப வனும், கல்வியில்லாதவர்களிடம் நட்புக்கொண்டு வாழ்ப வனும், முன்னோர் தேடிய பொருளை முயற்சியின்றி அழிப்பவனும் ஆகிய இம்மூவரும், நன்மக்களாகாதவர். (87)

பெரும்பிணி வந்து துன்புறுத்திக் கொண்டிருப்பதும், சாவு வரப்போவதாகத் தோன்றிக் கொண்டிருப்பதும், நற்செல்வம் தவறான வழியில் செலவிடப்பட்டு வருவதும் ஆகிய இம் மூன்றும், மனநிலையைக் கலக்கிவிடும். (88)

உள்ளத்தில் இரக்கத்திற்கு இடம் கொடாதவனும், பொருளைப் பயன்படுத்தாது புதைத்து வைத்தவனும், பிறரைத் தடித்த சொற்களால் தாக்கி வருபவனும் ஆகிய இம் மூவரும், பிறந்தும் பிறவாதவர். (89)

ஏழைகளுக்கு வழங்குவதற்காகப் பொருளைத் தேடு பவனும், அறநெறியைச் சேர்வதற்காக நூல்களைப் படிப்பவ னும், பிறரிடம் கருணை காட்டுவதற்காக வாழ்ந்து வருபவ னும் ஆகிய இம்மூவரும், செத்துஞ் சாகாதவர். (90)

அற்புப் பொருந்தளை யாப்பு நெகிழ்ந்தொழிதல்
கற்புப் பெரும்புணை காதலின் கைவிடுதல்
நட்பின் நயநீர்மை நீங்கல் இவைமூன்றும்
குற்றம் தரூஉம் பகை. (86)

கொல்வது தானஞ்சான் வேண்டலும் கல்விக்
ககன்ற இனம்புகு வானும் இருந்து
விழுநிதி குன்றுவிப் பானுமிம் மூவர்
முழுமக்க ளாகற்பா லார். (87)

பிணிதன்னைத் தின்னுங்கால் தான்வருந்து மாறும்
தணிவில் பெருங்கூற் றுயிருண்ணு மாறும்
பிணைசெல்வ மான்பின் றியங்க லிவைமூன்றும்
புணையின் நிலைகலக்கும் ஆறு. (88)

அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்
இறந்தின்னா சொல்லகிற் பானுமிம் மூவர்
பிறந்தும் பிறந்திலா தார். (89)

ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள் புரிந்து சொல்லுக சொல்லைஇம் மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு. (90)

பெரியோர்கள் வாழுங்காலத்தில் அவர்களைப் போற்றாது வாழ்பவனும், அவர்கள் இறந்தபிறகு இழந்து விட்டேனே என இரங்கி வருந்துபவனும், நலிவு ஏற்படும் போது நல்லவைகளைச் செய்யாமற் போனேனே என்று வருந்துகின்றவனும் ஆகிய இம்மூவரும், அறிவைப் பெற்றும் பெறாதவர். (91)

நல்ல குடிப்பிறந்தும் நற்செயலைக் கைக்கொள்ளாதவனும், எழுத்து அறிந்தும் இலக்கணம் அறியாதவனும், தவறான சொற்களை விரும்பிச் சொல்லுகின்றவனும் ஆகிய இம்மூவரும், இருந்தும் இல்லாதவர். (92)

இருளில் செல்வதுபோன்ற தவறான வழியிற் செல்லும் செயலும், நன்மை தீமைகள் அறியாமல் கொதித்து எழுகின்ற கோபமும், தீய பொருள்களில் ஆசையை உண்டாக்கும் வேட்கையும் ஆகிய இம்மூன்றும், பேதைமையாகிவிடும். (93)

நட்பு இல்லாதவனிடத்து அன்புக் குணம் காட்டுபவனும், கற்பு நெறியுடைய பெண்ணை இகழ்ந்து பேசும் கொடியவனும், குணமில்லாத தீயசொற்களைக் கூறிக்கூறி மகிழ்பவனும் ஆகிய இம்மூவரும், உண்மை அறியாதவர் (94)

அறிவு மழுங்கத் தின்று தீர்க்கின்ற பெரும்பசியும், நல்லோர் தன்னிடம் வராதிருக்கவேண்டும் என்ற ஆசையும், பிறருடைய கொடுமொழியைப் பொறாது எழும் கோபமும் ஆகிய இம்மூன்றும், நல்வினையை நீக்கும் படை! (95)

பெறுதிக்கண் பொச்சாந் துரைத்தல் உயிரை
இறுதிக்கண் யாமிழந்தேம் என்றல்—மறுவந்து
தன்னுடம்பு கன்றுங்கால் நாணுதல் இம்மூன்றும்
மன்னா உடம்பின் குறி. (91)

விழுத்திணைத் தோன்றா தவனும் எழுத்தினை
யொன்றும் உணராத ஏழையும்—என்றும்
இறந்துரை காமுறு வானுமிம் மூவர்
பிறந்தும் பிறவா தவர். (92)

இருளாய்க் கழியும் உலகமும் யாதும்
தெரியா துரைக்கும் வெகுள்வும்—பொருளல்ல
காதல் படுக்கும் விழைவும் இவைமூன்றும்
பேதமை வாழும் உயிர்க்கு (93)

நண்பில்லார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்
பெண்பாலைக் காப்பிகழும் பேதையும்—பண்பில்
இழுக்கான சொல்லாடு வானுமிம் மூவர்
ஒழுக்கம் கடைப்பிடியா தார். (94)

அறிவழுக்கத் தின்னும் பசிநோயும் மாந்தர்
செறிவழுங்கத் தோன்றும் விழைவும்—செறுநரின்
வெவ்வுரை நோனா வெகுள்வும் இவைமூன்றும்
நல்வினை நீக்கும் படை. (95)

கொண்ட கணவன் குறிப்பறிந்து நடக்கின்ற மனைவியும் எடுத்த காரியத்தை நடத்தி வெற்றி பெறுகின்ற வீரனும், தீமைகளைப் போக்கி நல்லது செய்கின்ற மன்னனும் ஆகிய இம்மூவரும், பஞ்சத்தைப் பாராதவர். (96)

பெரியோர் காட்டிய வழியை மீறி நடக்கும் செயலும், நட்புடையவர்களிடத்துப் பொய்கூறி ஏமாற்றும் வஞ்சகமும், விரும்பிக் கைக்கொண்ட மனையாளை வெறுத்துக் கைவிடும் கொடுமையும் ஆகிய இம்மூன்றும். அறம் இழந்தோர் தொழில்! (97)

நல்லவழியில் நடக்கும் அறிஞர்களை உள்ளத்தில் எண்ணி வாழ்தலும், தீமைகளை வெறுக்கும் மன்னனின் குடியாக இருந்து வாழ்தலும், கொண்ட கணவன் குறிப்பறிந்து குடித்தனம் செய்து வாழ்தலும் ஆகிய இம் மூன்றும், நல்வாழ்வுக்கு ஏற்ற விதைகள்! (98)

கற்றவர்களைக் கைவிட்டு விலகி வாழும் தீயோனும், மனம் செல்லும் வழியெல்லாம் சென்று உழலும் அறிவிலியும் தீமைகளை அஞ்சாது செய்து மகிழும் பேதையும் ஆகிய இம்மூவரும் நன்மையினைச் சேராதவர்! (99)

தன்மீது மாறாத அன்பு கொண்டுள்ள சேனையும், வந்து தாக்கினாலும் பழுதுபடாத அரணும், நல்வழியில் தேடிய பெருஞ் செல்வமும் ஆகிய இம்மூன்றும், மன்னர்க்குச் சிறந்த உறுப்பு. (100)

★

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை. (96)

ஐங்குரவ ராணை மறுத்தலும் ஆர்வுற்ற
எஞ்சாத நட்பினுள் பொய்வழக்கும்—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலும் இம்மூன்றும்
நற்புடையி லாளர் தொழில். (97)

செந்தீ முதல்வர் அறம் நினைத்து வாழ்தலும்
வெஞ்சின வேந்தன் முறைநெறியில் சேர்தலும்
பெண்பால் கொழுநன் வழிச்செலவும் இம்மூன்றும்
திங்கள்மும் மாரிக்கு வித்து. (98)

கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும் காமுற்று
பொட்டாங்கு செய்தொழுகும் பேதையும்
—முட்டின்றி
அல்லவை செய்யும் அலவலையும் இம்மூவர்
நல்லுலகம் சேரா தவர். (99)

பத்திமை சான்ற படையும் பலர் தொகினும்
எத்துணையும் அஞ்சா எயிலரணும்—வைத்தமைந்த
எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு. (100)

★

# திருச்சி விசுவநாதம்

## வரலாறு

### மா. சு. சம்பந்தன்

எழுதியது

"A detailed account of his life is given in this work by the author. The book makes very rnteresting reading."
—HINDU

*"இன்றைய சிந்தனையாளர்களில் ஒருவராக விளங்கும் இவரது வாழ்க்கை வரலாறு தற்காலத் தமிழகத்தைப் பல கோணங்களிலிருந்தும் பார்க்க விரும்புவோர்க்குப் பயன் படும்.*

**—ஆனந்த விகடன்**

*"அறிவுத்துறையிலாகட்டும், தொழில் துறையிலாகட்டும், சுயமுயற்சியால் முன்னுக்கு வந்தவர் திருச்சி கி. ஆ. பெ விசுவநாதம் அவர்கள். இவருடைய வாழ்க்கை வரலாற்றை விவரமாகவும், நல்ல தமிழிலும் கூறுகிறது இந் நூல்."*

**—தினமணி**

*"இத் தமிழன்பரது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங் களையும் படிக்கும்போது அவை உள்ளத்தில் புத்துணர்ச் சியை ஊட்டுகின்றன."*

**—ஈழகேசரி**

*"இத்தகைய அறிஞரின் வாழ்க்கை வரலாற்றைச் செம்மையான முறையில் படிப்பதற்குச் சுவையான தமிழ் நடையில் இந்நூலாசிரியர் எழுதியிருக்கிறார்."*

**—வீரகேசரி**

கிடைக்குமிடம்

## பாரி நிலையம்

### 184, பிராட்வே : : சென்னை-108.

முத்தமிழ்க் காவலர்

# கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

தமிழ்ச் செல்வம் ... ...
தமிழின் சிறப்பு ... ...
அறிவுக் கதைகள் தொண்ணூறு ... ...
எனது நண்பர்கள் ... ...
வள்ளுவரும் குறளும் ... ...
வள்ளுவர் உள்ளம் ... ...
திருக்குறள் கட்டுரைகள் ... ...
திருக்குறளில் செயல்திறன் ... ...
திருக்குறள் புதைபொருள் (முதற் பகுதி)
திருக்குறள் புதைபொருள் (இரண்டாம் பகுதி)
மும்மணிகள் ... ...
நான்மணிகள் ... ...
ஐந்து செல்வங்கள் ... ...
ஆறு செல்வங்கள் ... ...
அறிவுக்கு உணவு ... ...
தமிழ் மருந்துகள் ... ...
மணமக்களுக்கு ... ...
இளங்கோவும் சிலம்பும் ... ...
நல்வாழ்வுக்கு வழி ... ...
எண்ணக்குவியல் ... ...
வள்ளலாரும் அருட்பாவும் ... ...
வானொலியிலே (அச்சில்) ...
மாணவர்களுக்கு ...
திருச்சி விசுவநாதம் வரலாறு ...
(மா. சு. சம்பந்தம்)

## பாரி நிலையம்

184, பிராட்வே, சென்னை-600 108

T19
R00

Wrapper Printed by
Super Power Press, Madras-600 001. Phone: 584492